# கன்னியாகுமரி மாவட்டப் பள்ளிகள்
## முதல் திருப்புதல் பொதுத் தேர்வு, ஜனவரி - 2015

-----

பதிவு எண்

## வகுப்பு 10

நேரம்: 2.30 மணி

## தமிழ் முதல் தாள்

மொத்த மதிப்பெண்கள்: 100

www.tnschools.co.in

### பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

#### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 6×1=6

1) திருக்குறளைப் போற்றிப்பாடும் நூல் -----
அ) நால்வர் நான்மணிமாலை ஆ) திருவள்ளுவமாலை இ) இரட்டை மணிமாலை

2) கம்பராமாயணம் ----- காண்டங்களைக் கொண்ட நூல்
அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று

3) பணை என்னும் சொல்லின் பொருள் -----
அ) அரசு ஆ) ஆல் இ) மூங்கில்

4) தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் -----
அ) பேறறிஞர் அண்ணா ஆ) மு.வரதராசனார் இ) திரு.வி.க.

5) உலகம் என்னும் தமிழ்ச்சொல் ----- அடியாகப் பிறந்தது
அ) உலகு ஆ) உலவு இ) உளது

6) வள்ளலாரின் இயற்பெயர் -----
அ) சம்பந்தர் ஆ) இராமலிங்கர் இ) தாயுமானவர்

#### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** 6×1=6

7) மாணிக்கவாசகர் பாடல்கள் ----- திருமுறையில் இடம் பெற்றுள்ளன.
8) தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் -----.
9) இல்லாரை ----- எள்ளுவர்.
10) தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ----- ஆவார்.
11) இலெமூரியாவை ----- நாகரிகத் தொட்டில் என்பர்.
12) சங்ககாலத்தில் பெண்கள் ----- கடந்து செல்லக்கூடாது.

#### பகுதி - 3

**பொருத்துக:** 4×1=4

13) அரி – பேதையார் சொல் நோன்றல்
14) அறிவு – பரல்கள்
15) மெய் – பொறாமை
16) அழுக்காறு – உடல்

#### பகுதி - 4

**ஏற்ற வினாத்தொடர் அமைக்க:** 4×1=4

17) இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.
18) தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
19) செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
20) பெண்கள் உரிமைப் பெற்று புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பினார் பெரியார்.

### பிரிவு - II (மதிப்பெண்கள் - 20)

#### பகுதி - 1 5×2=10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** 5×2=10

21) குகனின் வேண்டுகோள் யாது?
22) அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?
23) வேந்தற்குரிய பொருள்கள் யாவை?
24) புலி வசனித்த படலத்தின் மூலம் நீயறியும் அறம் யாது?
25) நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது?
26) எப்படி நடந்திட வேண்டுமென இளந்திரையன் கூறுகிறார்?
27) போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

#### பகுதி - 2 5×2=10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:**

28) உலகிலுள்ள மொழிகளுள் இலக்கிய, இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
29) கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?
30) ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.
31) இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?
32) சத்திய தருமசாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

33) இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

34) கொடுங்கடலால் கொள்ளப்பட்ட பகுதிகள் யாவை?

**பிரிவு - III (மதிப்பெண்கள் - 24)**

**பகுதி - 1** **3×4=12**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:**

35) வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?

36) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

37) நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

38) கம்பராமாயணம் குறிப்பு வரைக.

39) தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்கு பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?

**பகுதி - 2** **3×4=12**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:**

40) பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?

41) கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

42) பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?

43) உழவுத்தொழில் குறித்து எழுதுக.

44) காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

**பிரிவு - IV (மதிப்பெண்கள் - 10)**

45) **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** **5**

‘பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

i) இப்பாடலின் ஆசிரியர் யார்?

ii) சான்றோர் யாருடன் சேர்வர்?

iii) ‘துகிர்’ –இச்சொல்லின் பொருள் யாது?

iv) நன்கலம் – பிரித்தெழுதுக.

v) இப்பாடல் பயின்று வந்துள்ள அடியெதுகையை எழுதுக.

46) **கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** **5**

‘தமிழ்ச்சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர், மேலும் எளிய குடிமகனையும், குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலைநுட்பச் செய்திகள் சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.:

i) தமிழ்ச்சான்றோர் மொழியை எங்ஙனம் பிரித்தனர்?

ii) ‘குடிமக்கள் காப்பியம்’ எனச் சிறப்பிக்கப்படும் நூல் எது?

iii) உலகாள்வோர்க்கு ஏற்ற அறநெறியாக சிலப்பதிகாரம் கூறும் செய்தி யாது?

iv) சிலப்பதிகாரம் கூறும் கலைநுட்பச் செய்திகளால் நாம் அறிவன யாவை?

v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

**பிரிவு - V (மதிப்பெண்கள் - 26)**

**பகுதி - 1**

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **2×8=16**

47) அ) அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க. **(அல்லது)**

ஆ) நிற்க நேரமில்லை – பாடல் மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

48) அ) மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக. **(அல்லது)**

ஆ) காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளைத் தொகுத்தெழுதுக.

**பகுதி - 2**

49) **செய்யுள் வடிவில் விடையளிக்க:** **2+2+3+3=10**

அ) ‘காலம்’...... எனத் தொடங்கும் குறள்.

ஆ) ‘வினை’ என முடியும் குறள்.

இ) ‘வாயிற் கடைமணி’ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

ஈ) ‘இன்று தொட்டிவண்’ எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

-------